[திரு. என். எஸ். வி. சித்தன்] [1970 ஆகஸ்ட் 27

1965-ம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது நமது முதல்வர் அவர்கள் அப்போது சட்டமன்றத்தில் புகார் கூறினார்கள். மின்சார வாரியத்திற்கு எருக்கஞ்சேரியில் வாங்கப்பட்ட மனை சம்பந்தமாக விவகாரம் பொதுக்கணக்கு ஆய்வுக்குழுவுக்கு அனுப்பப்பட்டது. இப்போது மாண்புமிகு கல்வி அமைச்சரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. நெடுஞ்செழியன் அவர்கள் விசாரித்ததற்கு பின்னாலே பொது கணக்குக் குழுவின் தலைவராக இருந்து இந்த விவகாரம் விசாரிக்கப்பட்டு குற்றம் கண்டுபிடிக்கப்பட்டது. அது சம்பந்தப்பட்ட விஷயம் சென்ற முறை 1969-ல் சட்டமன்றத்தில் எழுப்பப்பட்டது. இப்போது வாரியம் அதற்குப் பதில் கொடுத்து இருக்கிறது. வாரியத்தின் பதில் தெளிவாக இல்லை. "மின் வாரியம் ஆராய்கிறது, அதன் மீது அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. போடப்பட்ட குற்றச்சாட்டுகள் மீது ஆய்வு செய்யப்பட்டு வருகிறது" என்று அந்தக் குறிப்பில் உள்ளது. இப்போதே 5 ஆண்டு காலம் ஆகிவிட்டது. 1972 ஆண்டுக்குள்ளாவது நடவடிக்கை எடுத்துக் கொள்வீர்களா அல்லது அதற்கு மேலும் போகுமா? இனியும் காலம் தாழ்த்தாது குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

என்னுடைய தொகுதியில் மின் இணைப்புக் கிடைக்காத காடிக்கல், பொன்னமங்கலம், புங்கங்குளம், சொரிக்காம்பட்டி, மைக்குடி, கரிச்சக்கம்பட்டி, ஸ்வாமிமல்லம்பட்டி, மேல்நேசநேரி ஆகிய பஞ்சாயத்துகளுக்கு இந்த ஆண்டிலேயே மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்தோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

6. உணவு அமைச்சரின் விளக்க உரை

உணவகங்களில் காப்பி விலை குறைப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் அவர்கள் அவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சில நாட்களாக சென்னையில் காப்பி, டீ விலையை உயர்த்தி இருக்கிறார்கள், என்ற செய்தி பத்திரிக்கையில் வெளியாகி இருந்தது. சற்று நேரத்திற்கு முன்பு ஓட்டல் அதிபர்களை கூப்பிட்டு உட்கார வைத்துப் பேசினேன். அவர்களுடன் பேசி ஒரு முடிவிற்கு வந்தேன். நாளை காலை முதல் மீண்டும் காப்பி, டீ விலை 25 பைசாவாக குறைப்பார்கள். குறைக்கிறேன் என்று ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். அரசாங்கமும் சம்மதித்து இருக்கிறது.

1970 ஆகஸ்ட் 27]

திரு. என். எஸ். வி. சித்தன் : பலகாரம் விலை குறையுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பலகாரம் தரம் அந்தந்த ஓட்டல்களுக்கு தகுந்த மாதிரி இருக்கும். பலகாரம் விலையைக் குறைப்பது பற்றி நான் அவர்களிடம் பேசினேன். அவர்கள் எங்களிடத்தில் சில கஷ்டங்களைச் சொன்னார்கள். அதற்கு அரசாங்கம் அவர்களுக்கு எல்லா உதவியையும் தரும் என்று உத்தரவாதம் செய்து இருக்கிறோம். நாளை காலையிலிருந்து காப்பி விலை குறையும். "காப்பி, டீ இனி ஏழைக்கு ஏதம்மா" என்று சுவரொட்டி ஓட்டியவர்கள், 'காப்பி, டீ விலை குறைந்ததம்மா, தி.மு.க.-வின் திறமை புரிந்ததம்மா" என்று சுவரொட்டி ஓட்டு வார்கள் என்று நம்புகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இட்லி சைஸ் பெருத்து இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இட்லி சைஸ் பெருத்து இருக்கிறதா என்று கேட்டார்கள். இதுபற்றி அவர்களைக் கேட்ட போது, அவர்கள் சில சிரமங்களை எடுத்துச் சொன்னார்கள். சிரமத்திற்கு பரிகாரம் என்ன என்று கேட்டு, அதற்கான சிலவற்றிற்கு ஒப்புதல் தந்து இருக்கிறோம். நாளை முதலமைச்சர் வந்தவுடன் அவற்றைப்பற்றி பேசி முடிவு எடுப்போம். காப்பி விலை உடனடியாகக் குறையும்.

5. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

*** திரு. அ. ஆறுமுகம் :** தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1970-71-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை குறித்தும், 1969-ம் ஆண்டு துணை நிதி அறிக்கை குறித்தும் என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இங்கே 2 நாட்களாக மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீது தங்களுடைய கருத்துக்களை சில உறுப்பினர்கள் கூறினார்கள். அப்படிக் குறிப்பிடுகிற நேரத்தில் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மின்சாரத் துறையிலே போதுமான கவனம் செலுத்தவில்லை என்று பல குற்றச் சாட்டுகளைச் சொன்னார்கள். இருபது ஆண்டுக்காலமாக இந்த நாட்டை ஆண்டு கொண்டு இருந்த காங்கிரஸ் கட்சி சாதிக்க முடியாத பல சாதனைகளை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி செய்து இருக்கிறது. இதை நாட்டிலே இருக்கிற நல்ல உள்ளம் படைத்தவர்கள் எல்லாம் உணர்ந்து இருக்கிறார்கள். குறிப்பாக பல கிராமங்களில் எல்லாம் 100-க்கணக்கான விவசாயக் கிணறு களுக்கு மின்சார வசதி தந்து இருக்கிறோம். அது மட்டுமல்ல. பல சிற்றூர்களில் 20 ஆண்டுகளாக இருட்டறையில் கிடந்தவர்கள் இப்போது பகலில் வாழ்வதைப் போல் இரவில் மிகவும்